

மதுரை கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட குலமங்கலம் ஊராட்சியில் 8 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 10ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியினை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலாட்சி, ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், வடக்கு மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன், மாவட்ட துணைச் செயலாளர் ஆசை கண்ணன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் மற்றும் அனைத்துத் துறை அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்

### இரா.துரைராஜ் தலைமை! மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் முனைவர் த.ஜெகதீசனின் ஆய்வு நூல் –

# ‘முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு’ எனும் நூல்!

## அமைச்சர் எ.வ.வேலு வெளியிடுகிறார்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக்கொள்கிறார்!

சென்னை, ஜன.2-

சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, “முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு” எனும் நூலின் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

நாளை (3.1.2026 - சனிக்கிழமை) மாலை 5.30 மணி அளவில், சென்னை - கோட்டூர்புரம் - அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் - 3-வது தளத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு - சென்னை மாநகராட்சி 13-வது மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ் தலைமை வகிக்கிறார்.

வேளச்சேரி மேற்குப் பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி., பெ. மணிமாறன் எம்.சி., எஸ். பாஸ்கரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பச்சையப்பன் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ந.பழனிச்சாமி வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, “முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன - மொழி உணர்வு” எனும் நூலினை, பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வெளியிடுகிறார்.

நூலின் முதற்படியினை - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் - நாடாளு மன்ற உறுப்பினர்கள் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ப.தாயகம் கவி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா மற்றும் வழக்கறிஞர் ஆ.சௌந்தர், டெல்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் தி.உமாதேவி, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற உறுப்பினர் பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவாக - நூலின் ஆசிரியரும் சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளருமான முனைவர் த.ஜெகதீசன் நன்றியுரையாற்றுகிறார்.

### மயிலம் ஒன்றியத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# 536 மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார் - மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

மயிலம், ஜன.2-

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஒன்றியம் ஆலகிராமம், அவ்வையார்குப்பம், பாதிராபுலியூர், வீடூர், பெரியதச்சூர், பேரணி, அகூர், ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் பதினோராம் வகுப்பு மாணவ -மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி அந்த அந்த பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

பள்ளி தலைமை ஆசிரியர்கள்கிருஷ்ணன், கதிரவன், குமரவேல், சுந்தர் ராஜன், ஜெயபிரகாஷ் நாராயணன்,ஸ்டாலின், ராமமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலகிராமம்அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 61மாணவர்களுக்கும், அவ்வையார் குப்பம்அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் 71 மாணவர்களுக்கும், பாதிராபுலியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் 36 மாணவர்களுக்கும், வீடூர் அரசுமேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 134மாணவர்களுகும், பெரியதச்சூர்அரசு மேல்நிலைப் பள்ளி படிக்கும் 105மாணவர்களுக்கும், பேரணிஅரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 44 மாணவர்களுக்கும் அகூர் அரசு மேல்நிலைப்பள்ளி படிக்கும் 87 மாணவர்கள் என மொத்தம் 536 மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,ஒன்றிய கவுன்சிலர்கள் அஞ்சலாட்சி கிருஷ்ணமூர்த்தி, சுந்தரி தமிழரசன், பரிதா சம்சுதீன், ராஜ் பரத் ,ஊராட்சி மன்ற தலைவர்கள்இந்திரா சுரேஷ், மகாலட்சுமி கமலக்கண்ணன், அங்கயர் கன்னி சசிகுமார், ஜெகதீஸ்வரி பிரகாஷ், கணேசன், சேகர்,ஒன்றிய நிர்வாகிகள்சசிகுமார், பாலசுந்தரம் ,நெடி சுப்பிர மணியன், சுரேஷ், சேகர், பாஸ்கர், சண்முகம்,சம்சுதீன் உள்ளிட்டபள்ளி இருபால் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு !



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (02.01.2026-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில், எடப்பாடி நைனாம்பட்டியில் உள்ள, “ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்”, மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) தைத்திங்கள் தமிழர் திருநாள் திராவிட பொங்கல்சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்து

2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி, எம்.பி.**
செயலாளர் - சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.



சிவகங்கை நகர் 96வது பூத் 1வது வார்டில் கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி” என்ற முழக்கத்துடன் சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறினார். உடன் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், நிர்வாகிகள் ஆறு.சரவணன், எஸ்.ஜெயகாந்தன், ரமேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வருககவே புத்தாண்டு; வாகையே தந்தீண்டு!

ஆங்கிலேயர் உலகாண்ட
அந்தநாள் முதலாக
ஈங்குலகில் பெரும்பாலோர்
எண்ணத்தில் ஏறிவிட்ட
பாங்காக வாழ்க்கையில்
பயன்படுத்தும் ஓர்ஆண்டே
நீங்காமல் செயல்களை
நினைவூட்டும் ஓர்ஆண்டே
ஆங்கிலப் புத்தாண்டாம்
அனைத்திற்கும் வித்தாண்டாம்!

அன்றாடம் விழித்தவுடன்
ஆர்வமாய்ப் பார்க்கின்ற
ஒன்றாகும், இவ்வாண்டின்
ஒவ்வொரு நாளுமே
நன்றான இதழ்போல
நள்ளிரவில் வீழ்ந்துவிடும்!
இன்றுநேற்று நாளையென
எடுத்துரைத்தல்
இதுவேதான்!
நின்றுபல வரலாற்று
நிகழ்வுகளைச் செதுக்கியே
என்றுமே நினைவூட்டும்
இயல்பினதாம் இவ்வாண்டு!

பிறக்கின்ற புத்தாண்டு
பெருமைகள்
வாழ்விலே
சிறக்கின்ற ஆண்டாகத்
திகழுமென வரவேற்போம்!
துறக்கின்ற ஆண்டுபல
தொல்லைகள் தந்தாலும்
பறக்கவிட்டே
யாவையும்
பக்குவமாய்க்
கண்டவெற்றி
மறக்கத்தான் முடியுமா?
மாவிருள் விடியுமா?
திறக்கத்தான்
போகிறது
செவ்வொளி உலகமென,
பிறக்கத்தான்
புத்தாண்டு
பேரொளி எழுகிறது!
உறக்கந்தான்
போதுமென
ஓர்எழுச்சி மேவிடக்
கிறக்கந்தான்
இல்லாமல்
கிழக்கொளி எழுகவென்போம்!

போராட்டம் இல்லாமல்
புதியதோர் ஆண்டுதான்
சீரோட்டம் ஆகவே
திகழுமென்று எண்ணுவோம்;
ஏரோட்டம் வளரவும்
எழிலோட்டம் பொலியவும்
நீரோட்டம் போலவே
நிகழ்வன அமையவும்
ஊரோட்டம் எப்போதும்
உயர்அமைதி ஆகவும்
பாராட்டும் பண்புதான்
பலமடங்கு பெருகவும்
தேரோட்டம் போலவே
தொழில்கள்தாம்
செழிக்கவும்

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கூரோட்ட அறிவுதான்
குன்றாக உயரவும்
வேரோட்ட மாய்இனிமை
வெள்ளமே பெருகவும்
வீரோட்டச் சாதிமத
வெறிகளோ தீரவும்
ஈரோட்டுக் காஞ்சியின்
இனமான வழியிலே
பேரோட்டம் தமிழ்நாடு
பெரும்பயணம் செய்யவும்
சேரட்டும் யாவரும்;
தேர்தலில் கழகந்தான்
ஊரெங்கும் வெல்லட்டும்
ஒருபுதிய ஆண்டிலே!

புதியதோர் ஆண்டிலே
போர்க்களமாய்த்
தமிழ்நாட்டைச்
சதிசெய்து மாற்றவே
தவிக்கின்றார் சங்கிகள்;
மதியுள்ள தமிழ்நாட்டில்
மாற்றாரின் சூழ்ச்சிகள்
கொதிநெருப்பில்
சாம்பலாகும்;
கொட்டந்தான் ஏங்கலாகும்!

வருகின்ற புத்தாண்டு
வாழ்விலே மகிழ்ச்சியைத்
தருகின்ற ஆண்டாகத்
தளிர்க்கட்டும்,
தழைக்கட்டும்!
தெருவெங்கும் ஊரெங்கும்
சிறிதான வீடெங்கும்
பெருகியே இனிமைதான்
பிறக்கட்டும்,சிறக்கட்டும்;
அருகியே இல்லாமை
அகன்றுதான் போகட்டும்;
கருகிடும் வாழ்விங்கே
காணாமல் ஆகட்டும்!
பெருஞ்சிறப்பாய் நன்மைகள்
பெய்தாளும் தளபதியின்
மருவிலா ஆட்சிதான்
மலரட்டும் மறுபடியும்;
உருளட்டும் எதிர்ப்பவர்கள்;
ஒன்றுமின்றிப் போகட்டும்!
திருவொன்றே வளரட்டும்;
செழிப்பொன்றே
வழங்கட்டும்!
வருகவே புத்தாண்டு;
வளமெலாம் தந்தீண்டு!

தமிழ்மொழி இனம்நாட்டிற்கு
எதிராகத் தலைதூக்கும்
உமிகளைக் காற்றிலே
ஊதுவோம்; எல்லாமே
இமிழ்கடல் நுரைகளாம்;
எப்போதும் கரைவதாம்;
அமிழ்தாகப் பெரியாரின்
அண்ணாவின் கலைஞரின்
தமிழர்நலன் ஓங்கட்டும்;
தன்மானம் பகுத்தறிவு
இமயம்போல் உயரட்டும்;
இளங்கதிர் உதிக்கட்டும்!

### கழக மாநில மீனவர் அணி சார்பில் – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# 21ஆம் ஆண்டு சுனாமி நினைவு நாள் - அமைதிப் பேரணி - 4500 பேருக்கு நல உதவிகள்!

## மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. வழங்கினார்! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன.2-

கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் ஏற்பாட்டில் 21 ஆம் ஆண்டு சுனாமி நினைவு நாள் அமைதி ஊர்வலம் மற்றும் 80 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. கழக துணை பொதுச் செயலாளர், சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ. ராசா எம்.பி. கலந்து கொண்டு அமைதி ஊர்வலத்தை துவக்கி வைத்து 5000 பொதுமக்களுடன் அஞ்சலி செலுத்தி 4500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், பகுதி செயலாளர்கள் வை.ம. அருள்தாசன், ஏ.வி. ஆறுமுகம், ஆகியோர் பங்கேற்றனர். கழக மாநில மீனவரணி சார்பில் சுனாமி ஆழி பேரலையில் சிக்கி உயிர் நீத்த மீனவ சொந்தங்களின் நினைவை போற்றும் வகையில் மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் 21 ஆம் ஆண்டு அமைதி பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நகழ்வு திருவொற்றியூர் கே.வி. கே.குப்பத்தில் நடைபெற்றது.

கழக அமைப்புச் செயலாளர், சென்னை மண்டல தேர்தல் பொறுப்பாளர் ஆ. ராசா எம்.பி. அமைதி ஊர்வலத்தை துவக்கி வைத்து 5000 பொதுமக்களுடன் அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு கே.வி. கே. கடற்கரையில் அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஏற்பாட்டில் 70 நபர்களுக்கு மீன்பிடி இன்ஜின், 3000 பெண்களுக்கு அரிசி, 1000 பெண்களுக்கு மீன் விற்பனை செய்யும் பாத்திரம், 4 மாணவர்களுக்கு மடிக்கணினி, 20 நபர்களுக்கு தையல் இயந்திரம்,

20 நபர்களுக்கு சலவை பெட்டி, 1 மீனவருக்கு ஃபைபர் படகு, 1 தள்ளு வண்டி, 1 ஆட்டோ என 4500 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம், MLA , மேற்கு பகுதி கழக செயலாளர் வை.ம. அருள்தாசன், மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மாநில மீனவரணி துணை செயலாளர் இரா.பத்மநாபன், தலைமை கழக வழக்கறிஞர் கவி.கணேசன், மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ்.நாகலிங்கம், இ. ரமேஷ், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகி கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். 5வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி தெரிவித்தார்.வருகை தந்த பொது மக்கள் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

### சிவகங்கை,தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கம்!

# பெரி.பாலா தலைமையில் தி.மு.க.வினர் சாலை மறியல் போராட்டம்!

சிவகங்கை, ஜன.2-

தமிழகத்தில் வாக்காளர் திருத்தப்பணி SIR டிசம்பர் 11ம்தேதிவரை நடைபெற்றது. டிசம்பர் 19ம்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் தேவகோட்டை நகர கழக செயலாளர் 27 வது வார்டு முன்னாள் நகர் மன்ற உறுப்பினருமான பெரி. பாலாவின் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்து.

இது குறித்து அதிர்ச்சி அடைந்த நகர் கழக செயலாளர் பெரி.பாலா தேர்தல் அதிகாரியிடம் புகார் செய்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று அவருக்கு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைப்பானை வந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த பெரி. பாலா தலைமையில் திமுகவினர் திருப்பத்தூர் தேவகோட்டை சாலையில் சாலை மறியல் ஈடுபட்டார்கள் .இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

தேவகோட்டையில் நீண்ட வருடங்களாக வசித்து வரும் தேவகோட்டை நகரக் கழக செயலாளர் பெரி. பாலாவின் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தது குறித்து அப்பகுதியில் உள்ள கழகத்தினர் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துஉள்ளார்கள்.




தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் நகராட்சி 19வது பகுதி ஒழுகால் பாதை இரண்டாவது தெருவில் புதிய பேவர் பிளாக் சாலை அமைப்பதற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தனது சொந்தப் பணம் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கான வரைவோலையை 19 வது பகுதி நகர்மன்ற உறுப்பினரும் நகர் கழக துணைச் செயலாளருமாகிய எஸ்.வெங்கடேஷ்குமார் நகர்மன்றத் தலைவர் ராஜராஜேஸ்வரி அவர்களிடம் வழங்கினார். உடன் நகர் மன்ற துணைத் தலைவர் கிருஷ்ணவேணி தொடர்ந்து ஏழாவது முறையாக நமக்கு நாமே திட்டத்தின் மூலம் தனது பகுதிக்கு பணிகளை மேற்கொண்டு வருகிறார்.